**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.524/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செல்லப்பகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : 16 புதூர் | வயது | : சுமார் 75 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.08.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

வாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் ? நானும், எனது அண்ணனும் கிரையம் பெற்ற சொத்து ஆகும். நானும், எனது அண்ணனும் கூட்டாக தான் கிரையம் பெற்றோம் என்றால் ? ஆமாம். கிரையம் பெற்ற போது கிரைய பத்திரத்தை நான் வைத்துக்கொண்டேன் என்றாலும், சம்மத பத்திரத்தை எனது சகோதரரான 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் ? ஆமாம். என்னிடம் காட்டப்படும் பத்திரம் தான் சம்மத பத்திரமா என்றால் ? நான் படிக்காததால் எனக்கு பத்திரத்தை பற்றி தெரியாது. நாளது வரை பட்டாக்கள் கூட்டாக உள்ளது என்றால் ? சரிதான். சொத்துக்கள் பிரிக்காமல் உள்ளதால் பட்டாக்கள் கூட்டாக உள்ளதை வைத்து தான் அனுபவித்து வருகிறோம் என்றால் ? ஆமாம். நான் வங்கியில் கடன் பெறும் போது எனது சகோதரரிடம் நான் கையொப்பம் பெற்றேன் என்றால் ? எனது சகோதரரர் ஜாமீனுக்காக கையொப்பம் செய்தார். நான் வங்கியில் பெற்ற கடனை நாளது வரை திருப்பி செலுத்தவில்லை என்றால் ? சரிதான். நான் வங்கியில் பெற்ற கடனை கட்டுவதற்கு கடமைப்பட்டவர் என்றால் ? ஆமாம். சொத்துக்களை நலந்திகடு கலந்து இரண்டாக பிரித்து கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்றால் ?

ஏற்கனவே சொத்தினை பிரித்து தான் அனுபவித்து வருகிறோம். நான் அனுபவித்து வரக்கூடிய சொத்தில் வீடு கட்டியுள்ளேன். தாவா சொத்துக்களில் இரண்டு கோழிப்பண்ணைகள் உள்ள இடங்களையும், அந்த இடத்தில் உள்ள கோழிப்பண்ணை கட்டுமானங்களையும், 1ம் பிரதிவாதியாகிய நான் வைத்துக் கொண்டும், மேலும், நான் குடியிருக்கும் வீட்டை நானே தொடர்ந்து வைத்துக் கொள்ள உள்ளேன் என்றால் ? சரிதான். கோழிப்பண்ணைகள் உள்ள இடங்களையும், கட்டிடத்தையும், நான் குடியிருக்கும் வீட்டு கட்டிடத்தையும், இடத்தையும் என் பாகத்திற்கு ஒதுக்கிவிட்டு மற்ற இடங்கள் மற்ற நிலங்களை வாதிக்கு ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ? சரிதான். நான் போட்டுள்ள மூன்று போர்வெல்களை நானே வைத்துக் கொள்வது என்றால்? சரிதான். மேற்கண்ட எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் போக, மீதி சரிபாதி பாகம் வாதிக்கு ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ? சரிதான். வங்கியில் நான் பெற்றுள்ள கடனை முழுவதும் நானே கட்டி தீர்த்துக் கொள்வது என்றால் ? சரிதான். நானே கட்டி தீர்த்து கொள்கிறேன். வங்கியில் பெற்ற கடனின் பின்தொடர்ச்சியான பிரச்சனைகளை நானே பார்த்துக் கொள்வது என்றால் ? சரிதான். நான் வங்கியில் பெற்ற கடனை பொறுத்து 2ம் வாதி எந்த தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் ? சரிதான். எனது மருமகனான 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்றால் ? சரிதான். 1ம் வாதி எனது மருமகனுக்கு சொத்தினை குத்தகைக்கு விடவில்லை என்றால் ? சரிதான். 1ம் வாதி சொத்தினை பொது அதிகாரம் பெற்ற முகவரான பழனிச்சாமிக்கு குத்தகைக்கு விட்டுள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எத்தனை ஏக்கர் என்றால் ? 6 ஏக்கர் ஆகும். 2 ஏக்கர் ஒரு பக்கமும், 4 ஏக்கர் ஒரு பக்கமும் உள்ளது. கிணறு பாகமானது 4 ஏக்கர் உள்ள சொத்தில் உள்ளது. அந்த கிணறானது எனது வீட்டிற்கு முன்புறம் உள்ளது. அந்த கிணற்றில் 5 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் உள்ளது.

தாவா சொத்துவிபரத்தில் உள்ள பொதுக் கிணற்றில் போர்வெல் தண்ணீரை என்னுடைய தனிப்பட்ட போர்வெல்லில் இருந்து கிணற்றில் தண்ணீரை விட்டு பாசனம் செய்யவில்லை என்றால் ? சரிதான். பொதுக்கிணற்றிலும், பொது மின் இணைப்பிலும் வாதிகளுக்கு சரிபாதி பாகம் உள்ளது என்றால் ? சரிதான். அவரவர்கள் தனிப்பட்ட முறையில் போர்வெல் போட்டுள்ளதற்கு இருவரும் பொதுக்கிணற்றில் உள்ள மின் இணைப்பினை அவரவர்கள் தண்ணீர் இறைக்கும் முறையில் தனித்தனியாக பயன்படுத்தி போர்வெல் மோட்டார் இயக்க ஆட்சேபனை இல்லை என்றால் ? சரிதான்.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.13 17:46:23 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்